# JSR IAS ACADEMY

# DEVELOPMENT ADMINISTRATION IN TAMIL NADU

## தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் நலத் திட்டங்களின் பங்கு

# தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் நலத் திட்டங்களின் பங்கு

- **குழந்தைகளுக்கான மற்றும் மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்:**
- **பெண்களுக்கான நலத்திட்டங்கள்**
- **கிராமப்புற மற்றும் நகர்ப்புற நலத் திட்டங்கள்**
- **சுகாதார நலத்திட்டங்கள்**

## குழந்தைகளுக்கான மற்றும் மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்:

### 1. தடுப்பூசித் திட்டம்:-

- குழந்தை பருவத்தில் ஏற்படக்கூடிய ஏழு பெரும் நோய்களான தொண்டை அழற்ச்சி நோய், போலியோ, கக்குவான் இருமல், நரம்பு தளர்ச்சி, அம்மை, காச நோய் போன்ற நோய்களை கட்டுப்படுத்த தடுப்பூசித் திட்டம் 1979- ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட சேவைகள்: (ICDS):

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் 6 வயது வரையிலான குழந்தைகள், வளர்இளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கான மைய இடமாகும்.
- 1975 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 108 வது பிறந்தநாளில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் பேரின் 33 வட்டாரங்கள் முதன்முறையாக தொடங்கப்பட்டது.
- தமிழகத்தில் சென்னை (நகர்ப்புறம்) நிலக்கோட்டை (கிராமப்புறம்) மற்றும் தளி (பழங்குடி) ஆகிய மூன்று வட்டாரங்களில் முன்மாதிரி திட்டமாக தொடங்கப்பட்டு தற்போது தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.
- “ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாடு” என்ற இலக்கை எட்டுவதே நமது மாநிலத்தின் கொள்கையாகும்.

- 2016-2017 நிதியாண்டில் இந்திய அரசு மறுசீரமைக்கப்பட்ட ICDS -யை ஒரு குடையின் கீழ் திட்டமாக மாற்றியது. இந்திய அரசு 2017 ஆம் ஆண்டில், பின்வருவனவற்றை ஒரு குடையின் கீழ் ICDS -யில் உள்ளடக்கிய துணை திட்டங்களாக கொண்டுவந்தது.

1. அங்கன்வாடி சேவைகள்
2. வளர்இளம் பெண்களுக்கான திட்டம்.
3. குழந்தை பாதுகாப்பு சேவைகள்.

4.தேசிய குழந்தைகள் காப்பக திட்டம்.
5.போஷன் அபியான் (தேசிய ஊட்டச்சத்து மிஷன்).
6.பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY)

## 1.அங்கன்வாடி சேவைகள்:

- அங்கன்வாடி என்பது கிராமப்புற குழந்தைகள் பராமரிப்பு மையமாகும்.
- இந்திய அரசால் 1975-60, குழந்தைகளின் பசி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம். தொடங்கப்பட்டது.
- இந்திய மொழிகளில் அங்கன்வாடி என்பது "முற்றத்தின் தங்குமிடம்* என்று அர்த்தமாகும்.
- அங்கன்வாடி சேவைகள் 1975 ல் ஆண்டில் தொடங்கப்பட்டது...

## 2.வளர் இளம் பெண்களுக்கான திட்டம்

- இந்த திட்டம் இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது
- முதல் பகுதி துணை ஊட்டச்சத்து மற்றும் இரண்டாவது துணை அல்லாக ஊட்டச்சத்து கூறுகளாக உள்ளது.
- மாநில அரசு துணை ஊட்டச்சத்து 50% நிதி உதவி அளிக்கிறது வளர் இளம்பருவத் திட்டத்தின் கூறுகள் 2019-2020 அமல்படுத்தப்பட்டது.

## 3.ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்:

- ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் (ICPS) என்பது மத்திய அரசு நிதியுதவி திட்டமாகும்.
- இத்திட்டத்தில் கடுமையான மற்றும் பிரச்சனையான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளுக்கான பாதுகாப்பு சூழலை உருவாக்குவதே நோக்கமாககும்.
- பாதுகாப்பு சேவைகள் 2009 ல் ஆண்டில் அமல்படுத்தப்பட்டது.

## 4.தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்

- தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை வேலையில் இருக்கும்போதே பாதுகாப்பான இடத்தை வழங்குவனத் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குழந்தைகள் நலனுக்காக பெண்களுக்கு உரிமை அளிப்பதால் வேலைவாய்ப்பை கொடுக்க முடியும்.
- அதே நேரத்தில், 8 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய பங்காக அமைகிறது.
- தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம். 2019-2020 செயல்படுத்தப்பட்டது.

## 5.போஷன் அபியான் (NNM)

- இந்திய அரசால் தேசிய ஊட்டச்சத்து மிஷ்னை அமைத்துள்ளது.

- பிறப்பு முதல் வயது வரையிலான குழந்தைகள் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் மூன்று ஆண்டு குறிக்கோளுடன் தொடங்கியதுதான் போஷன் அபியான் (NNM)திட்டமாகும்.
- இந்த திட்டம் மார்ச் 2018-ல் ஆண்டில்தொடங்கப்பட்டது.

## 6.பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY)

- பிரதான் மந்திரி மாக்கு வந்தனா யோஜனா என்பது இந்திய அரசாங்கத்தால் நடத்தப்படும் மகப்பேறு நன்மைத் திட்டம் ஆகும்,
- இது 2016 - அறிமுகப்படுத்தப்பட்டது. முழுமையாக 2017-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டது.
- இத்திட்டத்தின் முதல் நேரடி பிறந்த குழந்தையோ அல்லது 19 வயது நிரம்பிய கர்ப்பினி மற்றும் 19 வயது நிரம்பிய பாலூட்டும் பெண்களுக்கு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

## 7.தொட்டில் குழந்தை திட்டம்:

- பெண் சிசுக்கொலையை ஒழிக்கவும், பெண் குழந்தைகளை காப்பாற்றவும், 1992ல், சேலம் மாவட்டத்தில், தொட்டில் குழந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெண் சிசுக்கொலை நடைமுறையில் இருந்த மதுரை, தேனி, திண்டுக்கல், தர்மபுரி மாவட்டங்களுக்கும், 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- 2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, கடலூர், அரியலூர், பெரம்புலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதம் அபாயகரமான அளவில் குறைந்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ளது.
- இதற்கு பல்வேறு சமூகப் பொருளாதார காரணங்கள் கூறப்படுகின்றன. இதை உணர்ந்து, இந்த எதிர்மறையான போக்கை சரிசெய்ய, தொட்டில் குழந்தை திட்டம் இந்த மாவட்டங்களுக்கும் 2011 ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது.
- தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ், மீட்கப்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கும் திட்டங்களின் கீழ், மாற்றுக் குடும்பத்துடன் மறுவாழ்வு பெறுகின்றனர். புதுமையான தொட்டில் குழந்தை திட்டம் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலிருந்தும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் நேர்மறையான விளைவு, 2001 இல் 942/1000 ஆக இருந்த குழந்தை பாலின விகிதம் 2011 இல் 943/1000 ஆக உயர்ந்துள்ளது.

## 8.முதலமைச்சரின் பெண் குழநதைகள் பாதுகாப்புத் திட்டம்:

- 1992 ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளின் நலனுக்கான முன்னோடி மற்றும் பாதையை மாற்றிமைக்கும் திட்டமாகும்.

- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், அரசின் நேரடி முதலீட்டின் மூலம் பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அதிகாரம் அளித்தல் மூலம் பாலினப் பாகுபாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

## இத்திட்டத்தின் நோக்கம்:

- பெண் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கை மற்றும் தக்கவைத்தலை ஊக்குவித்தல் மற்றும் குறைந்தபட்சம் இடைநிலை வரையிலான கல்வியை உறுதி செய்தல்.
- பெண் குழந்தைகளை 18 வயதுக்குப் பிறகே திருமணம் செய்ய ஊக்குவித்தல்.
- இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்பக் கட்டுப்பாடு நெறிமுறையைப் பின்பற்ற பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் நிதி அதிகாரம் அளித்தல்.
- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்துவதில் குடும்பத்தின் பங்கை வலுப்படுத்துதல்.

## திட்டத்தின் கீழ் வைப்பு முறை:

**திட்டம்-I:**

- ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே பிறந்திருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையான ரூ.50,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத்தொகை ரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்-II:**

- ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே பிறந்திருப்பின், அப்பெண் குழந்தைகளின் பெயரில் நிலையான வைப்புத்தொகையான தலா ரூ.25,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத்தொகை ரசீது நகல் பெண் குழந்தைகளின்குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.
- மேற்கூறிய வைப்புத்தொகை ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு, 18 வயது நிறைவடைந்தவுடன், வட்டியுடன் சேர்த்து முதிர்வுத்தொகை பெண் குழந்தைக்கு வழங்கப்படும். இந்தப் பலனைப் பெற, பெண் குழந்தைகள் 10ம் வகுப்பு பொதுத் தேர்வெழுத வேண்டும். இவ்வாறு, முதிர்வுத் தொகையானது பெண் குழந்தைகளின் உயர்கல்வியைத் தொடர உதவும்.
- பெண் குழந்தைகளுக்கு கல்விச் செலவுகளை ஈடுகட்ட 6வது ஆண்டு முதல் ஆண்டு ஊக்கத் தொகையாக ரூ.1800/- வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்திற்காக, ஆண்டு வருமான வரம்பு ரூ. 72,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெற்றோரில் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் வயது உச்ச வரம்பு 40 வயதாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 9.பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்:

- பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கவும் அவர்களின் கல்வியை உறுதிப்படுத்தவும் மாண்புமிகு பிரதமரால் 22 ஜனவரி 2015 அன்று ஹரியானா மாநிலத்தில் பானிபட்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இத்திட்டத்திற்கான செயல்பாட்டு அமைச்சகமாகும்.
- குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்தை தேர்ந்தெடுத்து, 100 மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- தமிழ்நாட்டில், குழந்தை பாலின விகிதம் மாநிலத்திலேயே மிகக் குறைவாக இருந்த கடலூர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டது. இருப்பினும் தமிழ்நாட்டின் குழந்தை பாலின விகிதம் 943/1000 என தேசிய விகிதமான 918/1000 ஐ விட அதிகமாக இருந்தது.

## இந்த திட்டத்தின் நோக்கம்:

- பாலின சார்ந்த பாலினம் அறிந்து கருக்கலைப்பு செய்வதை தடுத்தல்.
- பெண் குழந்தைள் உயிர் வாழ்வதையும் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் பங்களிப்பை உறுதி செய்தல்

## 10.சுதந்திரத்திற்கு முன் பள்ளி உணவுத்திட்டம்

- 1920 ஆம் ஆண்டு உலகின் முதல் மதிய உணவுத் திட்டமானது சென்னையில் தொடங்கப் பட்டது.
- 1920 ஆம் ஆண்டு நவம்பரில், மெட்ராஸ் மாநகராட்சி மன்றமானது ஆயிரம் விளக்குப் பகுதியிலுள்ள மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவினை வழங்குவதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது.
- இது ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ஒரு அணாவுக்கு மிகாத செலவில் வழங்கப் பட்டது.
- எழுத்தாளர் ஆர் கண்ணன், 'அண்ணா : தி லைஃப் அண்ட் டைம்ஸ் ஆஃப் சி என் அண்ணாதுரை' என்ற தனது புத்தகத்தில், தியாகராயச் செட்டியாரை மதிய உணவு திட்டத்தின் தந்தை என்று அழைத்துள்ளார்.
- அன்றைய மாநகராட்சித் தலைவரும், நீதிக்கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவருமான தியாகராய செட்டியார், அப்பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.
- இத்திட்டமானது பின்னர் மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டதால் அது மாணவர்களின் அதிக சேர்க்கைக்கு வழிவகுத்தது.

## 11.மதிய உணவுத் திட்ட முயற்சிகள்:

- இந்தக் கருத்தானது 1956 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் பயன்பாட்டைக் கண்டது.

- மாநிலம் முழுவதுமுள்ள அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவினை வழங்க அப்போதைய முதலமைச்சர் கே.காமராஜ் அவர்கள் முடிவு செய்தார்,
- இது 1956 ஆம் ஆண்டில் கவிஞர் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரரான சுப்பிரமணிய பாரதியின் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் (தற்போது தூத்துக்குடி மாவட்டத்தின் ஒரு பகுதி) தொடங்கப் பட்டது.
- 1956-57 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- 1957ஆம் ஆண்டு இந்தத் திட்டமானது சென்னையில் தொடங்கப்பட்டது.
- முதற்கட்டமாக தொடங்கப்பட்டது. 1,300 சத்துணவு மையங்களில் உள்ள 65,000 மாணவர்களை உள்ளடக்கியதாக
- 1982 ஆம் ஆண்டு ஜூலையில், அப்போதைய முதலமைச்சரான எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், அங்கன்வாடிகளிலுள்ள 2-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தினார்.
- நமது மாநிலத்தில் நடைமுறையில் இருந்த மதிய உணவுத் திட்டத்தினை, 'ஊட்டச் சத்து மிக்க மதிய உணவுத் திட்டமாக' மேம்படுத்தினார்.
- இது கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் 5-9 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 1984ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து, VI முதல் X வகுப்பு வரையிலான மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளனர்.
- அதன்பின் 1989 ஆம் ஆண்டு முதல்வர் மு. கருணாநிதி, ஊட்டச்சத்தான ஒரு உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- 1989 ஆம் ஆண்டு ஜூன் முதல் ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கும் வேக வைத்த முட்டைகளை வழங்குவதை அவர் அறிமுகப்படுத்தினார்.
- இது தற்போது செயல்பாட்டிலுள்ளதோடு மேம்படுத்தப் பட்டும் வருகிறது.
- பின்னர், புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டமானது நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டது.

## 12.மதிய உணவுத் திட்டம்

- மதிய உணவுத் திட்டம் என்பது இந்திய அரசின் பள்ளி உணவுத் திட்டமாகும்.
- இது நாடு முழுவதும் உள்ள பள்ளி வயதுக் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் குழந்தைகளின் மீதான உரிமைகளுக்கான மாநாட்டின் கீழ், குழந்தைகளுக்கு "போதுமான சத்தான உணவை" வழங்குவதற்கு இந்தியா உறுதி அளித்துள்ளது.
- 1992ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று இந்தியா UNCRC என்ற உடன்பாட்டினை அங்கீகரித்தது.

- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 என்ற சட்டத்தின் கீழ் மதிய உணவுத் திட்டமானது செயல்பாட்டில் உள்ளது.
- இந்தத் திட்டம் தொடக்க மற்றும் தொடக்க மேல்நிலை வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு வேலை நாட்களில் இலவச மதிய உணவை வழங்குகிறது.

## 13.சத்துணவுத் திட்டம்:

- 1982 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
- மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல், பள்ளிகளில் மாணவர் வருகையை தக்க வைத்தல், அதே நேரத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவை மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- பசி அல்லது நோய்வாய்ப்பட்ட குழந்தையால் முழுமையாக ஒருமுகப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த முடியாது. இதனை கருத்தில் கொண்டு, அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், சிறப்புப் பயிற்சி மையங்கள், மதராசாக்கள் மற்றும் சர்வ சிக்ஷா அபியான் கீழ் செயல்படும் பத்தாம் வகுப்பு வரையிலான தொடக்க மற்றும் உயர்நிலை வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு சூடான சமைத்த மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

### திட்டத்தின் நோக்கங்கள்

i. எல்லோருக்குமான தொடக்கக் கல்வி என்ற நோக்கில் மாணவர் சேர்க்கையை முழு அளவில் அதிகரித்தல் , பள்ளி இடைநிற்றல் விகிதங்களைக் குறைத்தல்.

ii. குறைவான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குதல்.

iii. பின்தங்கிய நிலையில் உள்ள குழந்தைகளை தவறாமல் பள்ளிக்குச் செல்ல ஊக்குவித்தல் மற்றும் முறையான கல்வியைப் பெற அவர்களுக்கு உதவுதல்.

iv. வேலை வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்.

## 14.முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:

- மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் காலைச் சிற்றுண்டி வழங்குதல் தொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண்,110ன் கீழ் 07.05.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- அதன்படி ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக் கூடிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் 15.09.2022 அன்று மதுரை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெற்றிகரமாக துவக்கி வைக்கப்பட்டது.

- காலைச் சிற்றுண்டி வழங்குவதால் ஒரு குழந்தைக்கு 293.40 கி.கலோரி ஆற்றல், புரதம் 9.85 கிராம், கொழுப்பு 5.91 கிராம், இரும்பு சத்து 20.41 மி.கிராம் மற்றும் சுண்ணாம்பு சத்து 1.64 மி.கிராம் கூடுதலாக கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

## 15.இல்லம் தேடிக் கல்வி

- இத்திட்டம் 27 அக்டோபர் 2021 அன்று தொடங்கப்பட்து.
- இது ஒரு தன்னார்வ தொண்டு.
- கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சார்ந்த பொது முடக்க காலங்களில் அரசு பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை சரி செய்ய இல்லம் தேடிக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- பள்ளி முடிந்த பின்பு மாலை நேரங்களில் 'இல்லம் தேடிக் கல்வி' மையங்களில் கற்பித்தல் சேவையை மேற்கொள்ள உள்ளது.

### தன்னார்வலர்கள்.

1. வாரத்திற்கு குறைந்தது ஆறு மணி நேரம் குழந்தைகளுடன் செலவிட தயாராக இருக்க வேண்டும் (அல்லது) பகுதி நேரமாகவும் தன்னார்வலராக இருக்கலாம்.
2. கண்டிப்பாக குழந்தைகளுடன் உரையாட தமிழ் தெரிந்திருக்க வேண்டும்
3. தமிழ், ஆங்கிலம், மற்றும் கணிதம் கற்றுத்தர வேண்டும். (பயிற்சிகளும் உபகரணங்களும் வழங்கப்படும்)
4. யார் நிர்பந்தமும் இன்றி தன்முனைப்பாக பங்கேற்க வேண்டும்
5. குறைந்தபட்சம் 17 வயது நிரம்பி இருத்தல் அவசியம்.

## 16.எண்ணும் எழுத்தும்

- தமிழ்நாட்டின் தொடக்க வகுப்பறைகளில் கற்றல், கற்பித்தலின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் எண்ணும் எழுத்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 2025ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் எட்டு வயதிற்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பொருள் புரிந்து படிக்கவும் எண்மதிப்பு அறிந்து அடிப்படைக் கணக்குகளைச் செய்யவும் தெரிந்திருக்க வேண்டும் என்பது இதன் இலக்காகும்.
- கரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்ட கற்றல் இடைவெளியைச் சரிசெய்வதையும் எண்ணும் எழுத்தும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்நோக்கத்தினை அடையும்வகையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத் தலைமையின்கீழ் 2022ஆம் கல்வியாண்டிலிருந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 1,2,3 வகுப்புகளில் எண்ணும் எழுத்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது

## 17. நான் முதல்வன்

- 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி படிப்புகள் அவை தொடர்பான வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்களை எளிதில் பெறும் வகையில் வழங்குவதே இந்த திட்த்தின் நோக்கமாகும்.
- மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வுகள், கல்வி உதவித்தொகை, கல்விக் கடன் குறித்த உடனடித் தகவல்களும் இங்கு கிடைக்கும்
- நான் முதல்வன் இணைய முகப்பில் 2000க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள், நிறுவனங்கள் வாயிலாக பெறக்கூடிய 300க்கும் மேற்பட்ட தொழில் சார்ந்த வழிகாட்டுதல்களும் அடங்கும்.

## 18. CM's திறனறித் தேர்வு திட்டம்

- தமிழக முதல்வர் திறனறித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**திட்டத்தின் பயன் :**

- 10ஆம் வகுப்பு படிக்கும், தேர்த்தேடுக்கப்பட்ட 1000 மாணார்வர்களுக்கு (500 ஆண்கள் 500 பெண்கள்) மாதம் ரூ.1000 உதவித்தொகை.
- 11, 12ஆம் வகுப்பு முடிக்கும் வரை வழங்கப்படும்.
- இந்த மாணவர்கள் உயர்க்கல்வி பயிலும் போது ஆண்டுக்கு ரூ.12,000 உதவித்தொகையாக வழங்கப்படும்.
- சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் போன்ற புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் பயிற்சி பெற, அரசுப் பள்ளிகளில் இருந்து 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

முயற்சி - பயிற்சி - தேர்ச்சி

## CM's திறனறித் தேர்வு திட்டம் நோக்கம்

- அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை உயர் கல்வி நிறுவனங்களில் சேர்வதை ஊக்குவிப்பது,
- மாணவர்களை கல்வி பெற ஊக்குவிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- அரசுப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள், தனியார் நிறுவனங்களில் தங்களுடைய நண்பர்களைப் போல, தனிப்பயிற்சியைப் பெறவில்லை என்று ஏமாற்றமடையக் கூடாது என்பதற்காகவே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.
- மாணவர்கள் சிரமமின்றி கல்வியைத் தொடர அரசு நிதியுதவி அளிக்கும்.

## CM's திறனறித் தேர்வு திட்டத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் நன்மைகள் பின்வருமாறு:

- தமிழக அரசு பள்ளி மாணவர்களுக்கு உதவும்.
- மாணவர்கள் கல்வியைத் தொடர அரசு நிதியுதவி அளிக்கும்.
- பெண்கள் உயர்கல்வி பெற ஊக்குவிக்கும்.
- மாணவர்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.
- 5. மாநிலம் முழுவதும் இலக்காக கொண்டு
- மாணவர்கள் இந்த திட்டத்தை பயன்படுத்த ஊக்குவிக்கப்படுவார்கள்.
- •தேவைகளைப் பூர்த்தி செய்யும் மற்றும் தகுதியுடைய பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுவார்கள்.

## திட்டத்திற்கான தகுதிகள்

- தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெற தகுதியுடையவர்கள்.
- தொலைதூர அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் குறைக்கடத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் மின்னணுவியல் போன்ற துறைகளில் ஆர்வமாக இருக்க வேண்டும்.
- தற்போது 10ம் வகுப்பில் சேர்ந்துள்ள மாணவர்களும் தமிழகத்தின் புதிய திறமை உதவித் திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர்கள்.

JSR
முயற்சி - பயிற்சி - தேர்ச்சி

# பெண்களுக்கான நலத்திட்டங்கள்:-

## திருமண உதவித் திட்டங்கள்:

**திருமண உதவித் திட்டங்களின் கீழ் உதவி பெறுவதற்கான தகுதி அளவுகோல்கள்**

**திட்டம்-I**

- **கல்வித் தகுதி:** மணமகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், பழங்குடியினராக இருந்தால் மணமகள் V வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.
- **பண உதவி:** ரூ. 25,000 மின்னணு பரிவர்த்தனை மூலம் செலுத்தப்படும், 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.

**திட்டம்-II**

- **கல்வித் தகுதி:** கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்கள், தொலைதூரக் கல்வி / அரசு அங்கீகாரம் பெற்ற திறந்த நிலைப் பல்கலைக்கழகம் படித்தவர்கள் இத்திட்டத்தின் கீழ் தகுதியுடையவர்கள்.
- பட்டயம் படித்தவர்கள் தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தகுதி பெற்றிருக்க வேண்டும்.
- **பண உதவி:** மின்னணு பரிவர்த்தனை மூலம் 50,000 செலுத்தப்படும், 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.

## 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதி திட்டம் (2022)

- பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களின் உயர்கல்வியை தமிழ்நாட்டில் மாணவிகளின் அரசுப் உயர்கல்விச் உறுதி பள்ளிகளில் சேர்க்கை செய்யவும் பயிலும் மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டும், **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம்** என்ற திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- பெண்களுக்குக் பெண்களின் தன்னம்பிக்கையை முதலீடு ஆதலால் கல்வி திறன்கள், வளர்க்கும் அரசுப் வழங்குதல் அறிவு சிறந்த என்பது மற்றும் உற்பத்தி பள்ளிகளில் **6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு** வரை பயின்று மேற்படிப்பில் சேரும் மாணவிகளுக்கு, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை **மாதம் ரூ.1000** வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

## 2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் (1975)

- இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு 8 கிராம் 22 காரட் தங்க நாணயத்துடன் மின்னணு மூலம் ரூ.15,000 நிதியுதவியும், தேசிய சேமிப்புச் சான்றிதழாக ரூ.10,000ம் வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற வருமான உச்சவரம்பு மற்றும் கல்வித் தகுதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.
- பட்டம்/பட்டயம் படித்தவர்களுக்கு ரூ.50,000, அதில் ரூ.30,000 மின்னணு மூலமாகவும், `20,000 தேசிய சேமிப்புச் சான்றிதழுடன், 8 கிராம் 22 காரட் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

## 3. ஈ.வி.ஆர். மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள்களுக்கான திரு மண உதவித் திட்டம் (1982)

- இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.25,000/- நிதியுதவியும், 8 கிராம் தங்க நாணயமும் பயனாளிக்கு வழங்கப்படுகிறது.

- குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். பட்டப்படிப்பு எனில் ரூ.50,000/- மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

## 4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித் திட்டம் (1985)

- இந்தத் திருமண உதவித் திட்டத்தின் கீழ், பயன் பெறுவதற்கு வருமான உச்சவரம்பு மற்றும் குறைந்தபட்ச கல்வி தகுதி நிர்ணயிக்கப்படவில்லை.
- பயனாளிகளுக்கு ரூ.25,000/- மற்றும் 8 கிராம் தங்க நாணயமும், பட்டப்படிப்பு எனில் ரூ.50,000/- மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

## 5. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத்திருமண உதவித் திட்டம் (1968)

- இத்திட்டத்தின் கீழ் மணமகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ரூ.25,000 நிதியுதவில், ரூ.15,000 மின்னணு மூலமாகவும், ரூ10,000 தேசிய சேமிப்புச் சான்றிதழாகவும், 8 கிராம் 22 காரட் தங்க நாணயத்துடன் வழங்கப்படுகிறது.
- பட்டம்/பட்டயப்படிப்பு பெற்றவர்களுக்கு ரூ.50,000, அதில் ரூ.30,000 மின்னணு மூலமாகவும், ரூ.20,000 தேசிய சேமிப்புச் சான்றிதழாகவும், 8 கிராம் 22 காரட் தங்க நாணயத்துடன் வழங்கப்படுகிறது.
- வருமான உச்சவரம்பு மற்றும் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

### கலப்பு திருமணத்தின் வகைகள்

**வகை – I :** கலப்பு திருமண தம்பதிகளின் துணைவர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக இருக்க வேண்டும் அதே சமயம் மற்ற ஒருவர் வேறு சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

**வகை – II**: வாழ்க்கைத் துணைவர்களில் ஒருவர் முன்னேறிய அல்லது பொதுப்பிரிவை சேர்ந்தவர்களாகவும், மற்ற ஒருவர் பிற்பட்ட/மிகவும் பிற்பட்ட வகுப்பை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

## 6.சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

சமூகத்தில் பெண்களின் நிலையை உயர்த்திட, குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில், அவர்கள் சுயமாக தொழில் புரிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்து கொள்ள உதவுகிறது.

## 7.மகளிர் உதவி எண் – 181

- 2018 நவம்பர் முதல் ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் மகளிர் உதவி நாடு முழுவதும் 181 ஒரே சீரான ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களை, தகவல் கோரும் பெண்களுக்கு இம்மையம் அளித்து வருகிறது.

## 8.தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம்

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் படி, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கழகம் லிமிடெட், சிறப்பு திட்ட சாதனமாக (Special Purpose Vehicle) கடந்த 2018-19 நிதியாண்டில் உருவாக்கப்பட்டது.

## தமிழ்நாடு மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை உரிமைகளைப் விசாரிக்கவும், பாதுகாத்திடவும் பெண்களுக்கான சட்டரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 2008-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

## தமிழ் நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் 1954-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகிறது.

## கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம்:-

- **'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'** இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டது.
- குடும்பத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் **பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம்** முதன்மையானது.
- அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்பதாகும்.
- குடும்ப அட்டையில் பெயர் இடம் பெற்றுள்ள ஒரு பெண் உறுப்பினர் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

## இத்திட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கான மற்ற அளவுருக்கள்:

- குடும்ப ஆண்டு வருமானம் 2.5 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள குடும்பம்.
- 5 ஏக்கர் (நன்செய் நிலம்) மற்றும் 10 ஏக்கர் (புன்செய் நிலம்) ஆகியவற்றிற்கு மிகாமல் குடும்ப நிலம் வைத்திருப்போர்.
- 3,600 அலகுகளுக்குக் குறைவான வீட்டு உபயோகத்திற்கான மின்சார நுகர்வு.

## இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்ற நபர்கள்:

- குடும்ப ஆண்டு வருமானம் 2.5 லட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள பெண்கள் மற்றும் வருமான வரி மதிப்பீடு செய்பவர்கள்.
- 7.5 லட்சம் ரூபாய்க்கும் மேல் ஆண்டு வருமானம் உள்ளவர்கள் மற்றும் தொழில் முறை வரி செலுத்துபவர்கள்
- மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஊழியர்கள்/ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள் தவிர),
- தனிப்பட்டப் பயன்பாட்டிற்காக மகிழுந்துகள், ஜீப்கள், இழுவை வண்டிகள் மற்றும் கனரக வாகனங்கள் போன்ற நான்கு சக்கர வாகனங்கள் வைத்திருப்பவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியற்ற நபர்கள் ஆவர்.
- முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், முறைசாராத் துறையினருக்கான நல வாரியத்தின் ஓய்வூதியம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இருந்து உதவி பெறும் குடும்பங்கள்.

இத்திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையில் 7,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

JSR
முயற்சி - பயிற்சி - தேர்ச்சி

# கிராமப்புற மற்றும் நகர்புற நலத்திட்டங்கள்:

## பெரியார் நினைவு சமத்துவபுரம்

சமூக நீதியை ஊக்குவிக்கவும், தந்தை பெரியாரின் சமூக சமத்துவ கொள்கையை பரப்பும் பொருட்டும், சுதந்திர பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகவும், "பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டம் தமிழ்நாடு அரசால் 1997-98 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 238 சமத்துவபுரங்கள் இரு கட்டங்களாக அமைக்கப்பட்டன.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் முழுமையாக நிதியளிக்கப்படும் திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் 234 தொகுதிகளுக்கு ஆண்டுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.3.00 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

- மக்களின் பங்கேற்புடன் பொது சொத்துக்களை உருவாக்குவதை ஊக்குவிக்க நமக்கு நாமே திட்டத்தினை மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- தனிநபர்கள், குழுக்கள், அமைப்புகள், வணிக நிறுவனங்கள் அல்லது உள்ளூர் மக்கள் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்களிப்பை அளித்து நமக்கு நாமே திட்டத்தில் பங்கேற்கலாம்.
- பொது மக்களின் பங்களிப்பு மதிப்பீட்டில் 50 சதவீதம் அரசின் பங்களிப்பு 50% என இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 13.01.2023 அன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது, "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும் என்றும் இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.4,000 கோடியில் மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

## குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)"

கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை கட்டுவதற்காக, 2022-23-ஆம் ஆண்டில் "குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS)" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) 2021-22-ல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க (PUPS) மற்றும் நடுநிலைப் (PUMS) பள்ளிகளில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலிசம் பரவுதலை கட்டுபடுத்தும் வகையில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் 2003-04 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

## சுய உதவிக் குழு இயக்கம் :-

- தொலைநோக்கு பார்வை கொண்ட முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு, கருணாநிதி அவர்களின் தலைமையின் கீழ், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களுக்கான விதை விதைக்கப்பட்டது
- ஐஃபாடு (IFAD) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு இயக்கம் வலுப்பெற்றது.
- 1996 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் திட்டத்தின் கீழ் இந்த இயக்கம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது.
- 2000 ஆம் ஆண்டுக்குள் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.
- பலமான சுய உதவிக் குழு அஸ்திவாரம் உருவாக்கப்பட்டிருந்ததால், 1999 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பங்களிப்புடன் ஸ்வர்ணஜெயந்தி கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY) அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த முடிந்தது.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012-13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. வாழ்வாதார மேம்பாடு, நிதி மற்றும் பிற சேவைகளை அணுகுவதன் வாயிலாக ஏழைக் குடும்பங்கள் சுய வேலைவாய்ப்பு மற்றும் திறமையான வேலை வாய்ப்புகளைப் பெறுவதன் மூலம் வறுமையைக் குறைப்பதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும்.

## தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)

2019-2020 ஆம் ஆண்டு முதல் தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டமானது திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5மாவட்டங்களின் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் சமூகப் பொருளாதார மாற்றத்தையும், தொழில் மேம்பாடு மற்றும் மேல்நோக்கிய வளர்ச்சியையும் தொலைநோக்காகக் கொண்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

- வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் மூன்றாம் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார தலைமுறை வறுமை மற்றும் பொருளாதார அதிகாரம் அளிக்கும் திட்டம் ஆகும்.
- இத்திட்டம், பெண்களை மையப்படுத்திய நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தைப் பெறவும், வாழ்க்கையை ஒளிமயமானதாக மாற்றியமைக்கவும் முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.
- தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் என்ற பெயரில் செயல்பட்டு வந்த இத்திட்டம் 07.02.2022- படி "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ஊரகப் பகுதிகளில் சமூகப் பொருளாதார மாற்றத்தையும், தொழில் மேம்பாடு மற்றும் மேல்நோக்கிய வளர்ச்சியையும் தொலைநோக்காகக் கொண்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

## முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்:-

- உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சைகளை கட்டணமில்லாமல் ஏழை மற்றும் குறைந்த வருவாய் பெறும் பொதுமக்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் 23.07.2009 அன்று தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது.

- ஒன்றிய அரசின் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் 23.09.2018 முதல் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தற்போது இத்திட்டம் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் சுமார் 1.37 கோடி குடும்பங்கள் (ஜனவரி 2022 முதல்) பயன்பெற்று வருகிறார்கள்.
- இத்திட்டத்தில் பச்சிளங் குழந்தைகளுக்கான சிகிச்சை முறை உள்பட 1,090 சிகிச்சை முறைகளும் 8 தொடர் சிகிச்சை வழிமுறைகளுக்கும் மற்றும் 52 பரிசோதனை முறைகளுக்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.
- 800 அரசு மற்றும் 900 தனியார் மருத்துவமனைகள் சிகிச்சைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**பயன்கள்** :

இத்திட்டத்தின் படி ஒரு குடும்பம் ஒரு ஆண்டிற்கு ரூ.5,00,000/- வரை கட்டணமின்றி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம்.

## 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் :-

- இந்தியாவிலேயே முதல் முறையாக 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாமனப்பள்ளி கிராமத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 5-8-2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- 'மக்களை தேடி மருத்துவம்' திட்டம் எனும் பெயரில் 1 கோடி மக்களுக்கு வீடு தேடி மாத்திரை, மருந்துகள், மருத்துவ சிகிச்சைகள் வழங்குவதற்கான திட்டம் தமிழ் நாடு அரசால் தொடங்கப்படவுள்ளது. தமிழகத்தில் முதற்கட்டமாக 20 லட்சம் பேருக்கு இந்த சேவைகளும், அடுத்து விரைவில் 1 கோடி பேருக்கும் வழங்கப்பட இருக்கிறது.
- இத்திட்டத்தின் மூலம், நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று சில அவசியமான சேவைகள் வழங்கப்படவுள்ளன.
- சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட பலரும் ஆஸ்பத்திரிகளில் மாத்திரைகள் வாங்கி உட்கொண்டு வருகிறார்கள். இதைபோல உள்ள நோயாளிகளை கண்டறிந்து அவர்களின் வீடுகளுக்கே நேரடியாக சென்று தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கப்படும்.
- 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் இயலாமையில் உள்ள நபர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உடல்நலப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
- குறிப்பாக, ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், சிறுநீரகப் பிரச்சினைகள், குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகள், ஆகியவற்றைக் கண்டறிந்து, சிகிச்சை அளிப்பது இத்திட்டத்தின் முக்கியப் பணி.
- இதில், பொது சுகாதாரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் பங்கேற்று, அவர்களின் சேவையை ஆற்ற இருக்கின்றனர்.

## இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48

- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்தில் இலவச சிகிச்சை அளிக்கும் 2022ஆம் ஆண்டு 'நம்மை காக்கும் 48' திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் மூலம் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உடையவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வெளிநாட்டவர் என அனைவருக்கும் வருமான வரம்பு ஏதும் கணக்கில் கொள்ளாமல், தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயமடைவோர்களுக்கு முதல் 48 மணி நேரம் வரை கட்டணமின்றி மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 81 மருத்துவச் சிகிச்சை முறைகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.1 லட்சம் வரை செலவினத்தில் (ceiling limit) சிகிச்சை மேற்கொள்ளப்படும்
- 48 மணி நேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் நிலையற்றவராக (Unstable) இருந்தால் அல்லது தொடர் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால், பின்வரும் மூன்று வழிகாட்டுதல்களின்படி சிகிச்சைகள் வழங்கப்படும்
- 1முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், நோயாளியை நிலைப்படுத்தி அந்த மருத்துவமனையிலேயே மேலும் சிகிச்சை தொடரலாம்.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாமல் இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் இல்லை என்றால், நோயாளியை நிலைப்படுத்தி அரசு மருத்துவமனைக்கு மாற்றி சிகிச்சையை கட்டணமில்லாமல் தொடரலாம்.
- சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனைக்கு செல்ல தயாராக இல்லை என்றாலோ (அல்லது) தனியார் காப்பீட்டிலோ (அல்லது) பணம் செலுத்தியோ சிகிச்சையை பெற விரும்பினால், நோயாளியை நிலைப்படுத்தி அதே மருத்துவமனையிலோ அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் பிற மருத்துவமனையிலோ சிகிச்சைக்கான கட்டணத் தொகையை தனிநபரே செலுத்தி சிகிச்சையைத் தொடரலாம்.
- இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48 திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பற்றிய விவரங்கள் மாவட்ட வாரியாக பட்டியலிடப்பட்டு பொதுமக்கள் அனைவரும் அறியும் வகையில் வலைத்தளங்களில் (https://cmchistn.com) வெளியிடப்பட்டுள்ளன.
- மேலும், இது குறித்து விவரங்களை மருத்துவமனை, அவசரகால ஊர்தி பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் அறியும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து மேலும் விவரங்கள் அறிய கட்டணமில்லா தொலைபேசி எண் 104-ஐ தொடர்பு கொள்ளலாம்.